**IN THE COURT OF SUBORDINATE JUDGE, ARAKKONAM.**
**OS.No.138 /2020**

**Deposition of Witness : PW-1**

பெயர் : வீரராகவன்

தந்தை பெயர் : குப்பன்

**Solemnly affirmed in accordance with the provisions of Section 6 of the Oaths Act, 1969 on 01.11.2025.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

பி இன சொத்தில் உள்ள 20 செண்ட்டிற்கு யார் பெயரில் பட்டா இருக்கிறது என்றால் கோவர்த்தனி என்பவர் பெயரில் இருக்கிறது. கோவர்த்தனி இந்த வழக்கில் முதல் பிரதிவாதி என்றால் சரிதான். பி இன சொத்தில் பெயர் மாற்றம் செய்வதற்கு மனு செய்து கட்டாய மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டேனா என்றால் நான் மேற்கொள்ளவில்லை.

தாவா சொத்திற்கு சர்வே நம்பர் 328/4 பி ஆகும். 4 பியில் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 93 செண்ட்டாகும். அந்த 93 செண்ட்டிற்கு முதல் முதலில் யார் பெயரில் பட்டா பத்திரம் இருந்து என்றால் அண்ணாமலையின் பெயரில் இருந்தது. அண்ணாமலை அவரது சொத்தை யாருக்கு கொடுத்தார் என்றால் அவரது மகள் கோவர்த்தினிக்கு கொடுத்தார். கோவர்த்தினிக்கு அண்ணாமலை 20 செண்ட் கொடுத்தார், அந்த 20 செண்டை கோவர்த்தினி எங்களுக்கு கொடுத்துவிட்டார்.

கோவர்த்தினியிடம் இருந்து அந்த 20 செண்ட்டை எனது தந்தையார் 2000 ம் வருடம் கிரையம் பெற்றார். வா.சா.ஆ-1 ஆவணம் வில்லங்க சான்றிதழ் 24.12.2019-ல் பெறப்பட்டது என்றால் சரிதான். 2019-ல் வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்த்துவிட்டு ஓராண்டு கழித்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். சர்வே நம்பர் மாறிய விவரம் 2019-ம் வருடமே எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

நில அபகரிப்பு செய்ததை எதிர்த்து வா.சா.ஆ-4 புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எப்போது புகார்கொடுத்தேன் என்றால் நான் கேட்ட போது கொடுக்க மறுத்ததால் புகார் அளித்தேன். அந்த புகார் மனுவை அளித்தது யார் என்றால் 3-ம்

பிரதிவாதியாகிய என் சகோதரர் ஆவார். 2020-ல் புகார் கொடுத்த போது உளியநல்லூர் கிராமத்தில் இருந்ததாக புகார் கொடுத்தார் என்றால் சரிதான். என் தம்பி 3-ம் பிரதிவாதி வெங்கட் சென்னையில் வழக்கறிஞராக இருக்கிறார் என்றால் சரிதான்.

வா.சா.ஆ- 6 பட்டாவை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்திற்கு பக்கத்தில் இருக்கும் சொத்துக்கள் எங்களுடையது என்பதை காட்டுவதற்காக அதை தாக்கல் செய்துள்ளேன்.

**(பிரதிவாதி வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**